செய்தி வெளியீடு எண்: /2017 நாள். 02.05.2017

**சேலம் மாவட்டத்தில் சத்துணவுத்துறையில் அமைப்பாளர் நிலையில் 349 பணியிடங்கள் மற்றும் சமையல் உதவியாளர் நிலையில் 518 காலி பணியிடங்களுக்கு 08.08.2016 அன்று வரை பெறப்பட்ட விண்ணப்பதாரர்களில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் கடிதம் அனுப்பும் பணி சம்மந்தப்பட்ட ஆணையாளர்கள் மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளது.**

**12.05.2017 அன்று வெள்ளிக்கிழமை அந்தந்த ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகத்தில் அமைப்பாளர் மற்றும் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு நேர்காணல் நடத்தப்படவுள்ளது.**

## சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சம்பத், இ.ஆ.ப அவர்கள் அறிவிப்பு

______******______

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின்கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களில் அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்கள் இன சுழற்சி முறையில் நிரப்ப அரசால் உத்திரவிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள்/நகராட்சி/மாநகராட்சி அலுவலகங்களில் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் 26.07.2016 முதல் 08.08.2016 வரை அலுவலக வேலை நேரங்களில் பெறப்பட்டது.

அதனடிப்படையில் தகுதிவாய்ந்தோருக்கு சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையாளர் மூலமாக நேர்காணலுக்கான அழைப்பாணை அனுப்பப்படவுள்ளது. சத்துணவு அமைப்பாளர் மற்றும் உதவியாளர்களுக்கான நேர்காணல் 12.05.2017 வெள்ளிக்கிழமை அன்று அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகங்களில் நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரர்கள் அழைப்பாணை கடிதத்தில் தெரிவித்துள்ள கல்வித்தகுதி, வயது, சாதி, தூரம் மற்றும் உரிய சான்றுகளுடன் நேர்காணலில் கலந்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக
சேலம்

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாவட்டம்.